05-1-2021 7

மக்கள் குரல்

# ராமசந்திரா பல்கலைக் கழகத்தில் 1266 மாணவர்களுக்கு பட்டங்கள்: 94 சாதனையாளருக்கு தங்கப் பதக்கம்

## மத்திய சுகாதார துறை அமைச்சா் ஹா்ஷ்வா்தன் வழங்கினாா்

சென்னை, ஜன. 5–

ராமச்சந்திரா பல்கலைக் கழகத்தில் ஆன் லைன் பட்டமளிப்பு விழாவில் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன், 1266 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களையும், 94 சாதனையாளர்களுக்கு தங்க பதக்கங்களை வழங்கினார்.

கோவிட் 19 வைரஸ் பரவல் காலத்தில் 300 படுக்கைகள் கொண்ட கொரோனா சிகிச்சை பிரிவு துவக்கம், தடுப்பூசி ஆய்வு பிரிவு ஏற்பாடு செய்த வேந்த வி.ஆர். வெங்கடாசலத்தை அவர் பாராட்டினார்.

கோவிட் பெருந்தொற்றிலிருந்து நிவாரணம் பெற மத்திய அரசு தடுப்பூசி திட்டத்தை பொிய அளவில் மேற்கொள்ள உள்ளது என்று ஸ்ரீ இராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் இன்று நடந்த மெய்நிகர் 32வது பட்டமளிப்பு விழாவில் மத்திய நல்வாழ்வு, குடும்ப நலம் துறைகள் அமைச்சர் ஹர்ஷவர்தன் கூறினார். நாட்டில் மருத்துவ வசதிகளை மேம்படுத்த மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளை விளக்கிய அமைச்சர் ஹர்ஷவர்தன், உலக சுகாதார அமைப்பின் இலக்குகளுக்கு ஏற்ப இப்போது 1700 நோயாளிகளுக்கு ஒரு மருத்துவர் என்று இருப்பதை 1000 நோயாளிக்கு ஒரு மருத்துவர் என்ற நிலையை எட்டும் வண்ணம் அரசு நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் ஒரு மருத்துவக் கல்லூரியையாவது துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவமனையில் கோவிட் சிகிச்சைக்காக ஒரு தனி பிரிவு ஏற்படுத்தப்பட்டதையும், 2020 ஏப்ரல் முதலே சோதனை மையத்தை செயல்படுத்தி, இந்திய மருத்துவக் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளுக்கானபரிசோதனைகளை மேற்கொண்டதற்காகவும் வேந்தர் வி.ஆர். வெங்கடாசலத்தை பாராட்டுகிறேன். தேசிய கல்விக் கொள்கைக்கு ஏற்ப பல துறை படிப்புக்களுக்கான ஒன்றாக இப்பல்கலைக்கழகம் உருவாகி வருகிறது. நிறுவன வேந்தர் ராமசாமி உடையாரின் கனவு மெய்ப்படும் வகையிலும், வேந்தர் வி.ஆர். வெங்கடாசலம், இணை வேந்தர் ஆர்.வி. செங்குட்டுவன் தொடர் முயற்சிகளாலும் ஸ்ரீ இராமச்சந்திரா இந்திய பல்கலைகழகங்களில் 28வது இடத்தைப் பெற்றுள்ளது. அதன் மருத்துவக்கல்லூரி 13வது இடத்தையும், பல் மருத்துவ கல்லூரி 7வது இடத்தையும், 2020க்கான தேசிய கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசை பட்டியலில் இடம் பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழகத்தை முதல் நிலை ஒன்றாகவும், பல்கலைக் கழகங்களின் மானியக்குழு தரம் வழங்கி உள்ளது என்று அவர் கூறினார்.

வேந்தர் வெங்கடாசலம் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார். இணை வேந்தர் ஆர்.வி. செங்குட்டுவன் மற்றும் துணைவேந்தர் பி.வி. விஜயராகவன் சிறப்பாக தேறிய மாணவர்களுக்கு 94 தங்கப் பதக்கங்களையும், முனைவர், சிறப்பு மருத்துவ படிப்புகள், முதுகலை மற்றும் பட்டப்படிப்பு மாணவர்கள் 1266 பேருக்கு சான்றிதழ்களை வழங்கினர்.

### தடுப்பூசி ஆய்வு

முன்னதாக தன்னுடைய அறிக்கையை சமர்ப்பித்த துணைவேந்தர் பி.வி. விஜயராகவன் கோவிட் பெருந்தொற்று காலத்தில் மருத்துவமனையில் 300 படுக்கைகள் மற்றும் 15 தீவிர சிகிச்சைக்கான படுக்கைகள் கொண்ட கோவிட் தனிப்பிரிவு அமைக்கப்பட்டு, உடையார் மையத்தில் மற்ற சிகிச்சைகள் தொடர்ந்து நடைபெற்றன என்று கூறினார்.

இந்திய சீரம் மருத்துவக்கழகம், பாரத் பயோடெக் மற்றும் பிசிஜி தடுப்பூசிகளுக்கான நோயாளிசார் கோவிட் தடுப்பூசி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் முதலாவது கோவிட் தொற்று ஏற்படுவதற்கு முன்பே அதன் ஆய்வுக்கூடங்கள் இந்திய மருத்துவக்கழகத்தின் அங்கீகாரம் பெற்று கோவிட்டுக்கான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொற்றுப் பரவல் கண்டுபிடிப்பு, சிகிச்சை பணியாளர்களுக்கான தொடர் சோதனைகள் போன்றவைகள் மூலம் பல்கலைக்கழக வளாகத்திலும் கோவிட் தொற்று பரவுவது தடுக்கப்பட்டது.

கணிணி வழி மூலம் தினசரி பாடதிட்டங்களும், தோ்வுகளும் நடத்தப்பட்டு முடிவுகள் அறிவிக்க பட்டுள்ளன. எம்.பி.பி.எஸ் மற்றும் பி.டி.எஸ் தவிர மற்ற எல்லா பட்ட மற்றும் பட்ட மேற்படிப்பு கல்விகளுக்கான முதல் ஆண்டு சோ்ப்பும் முடிக்கப்பட்டு, கணிணி வழி படிப்புகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி உளவியல் துறையில் எம்.எஸ்.சி படிப்பும், விளையாட்டுத் துறைக்கான இயன்முறை மருத்துவத்திற்கான பட்ட மேற்படிப்பும், மருத்துவ சிகிச்சை மேலாண்மையில் தற்போது பணியாற்றுபவர்களுக்கான பகுதி நேர டிப்ளமா படிப்பும் துவக்க பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் ஆய்வுத்துறை தலைவர் எஸ்.பி.தியாகராஜன், பலதுறை தலைவர் மகேஷ் வக்கமுடி, தோ்வு கண்காணிப்பாளர் ஜோதி மலர் மற்றும் பதிவாளர் வி.சுவாமிநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வேந்தர் வி.ஆர். வெங்கடாச்சலம், இணை வேந்தர் செங்குட்டுவனுக்கு பாராட்டு

